ஸ்ரீராமனைத்துங்கசெந்தமிழோர்துன்பபரி
காராவணவரதகல்யாணு - பாராரும்

பணபராமென்றுமகாராசன்கீர்த்தியென்னுல்
ஆனதுபோத்திரங்கொண்டாடினேன் - தானும்

இருங்கைதனைநீட்டித்திரள்சமுகந்தன்னில்
இருக்கைமகிழ்ச்சியுடனீந்தான் - உருக்கியெங்கோன்

தன்னுடையசித்தத்தேசந்தோஷங்கைமீற
என்னுடையவண்ணமரங்கேற்றுதலும் - மின்னுமுழு

நீலமொன்றுகைக்குநிறைந்தகணையாழி
சாலுவைசெம்பொற்சரப்பணியும் - மேலும்

விரும்புபலபூஷணங்கண்மிக்ககட்டுவர்க்கம்
கரும்பரிசிலத்தனையுந்தந்து - திரும்பவுமென்

பாமாலைபெற்றவிலைக்குப்பதின்மடங்காச்
சீயான்கொடுத்ததிரவியமே - நாமம்

பணமேயெனப்படைத்தபாக்கியவானேவங்
கணமேயென்றுருயிரேகண்ணே - குணநிதியே

சாம்புநதிதீரத்துஞ்சாளக்கிராமத்தும்
மேம்படிசித்தாதிகள்செய்வித்தையிலும் - தேம்பொழியும்

பன்றிமலையினுநீபண்டுபிறந்தாயங்கு
நின்றுலகமெங்குநிறைந்திட்டாய் - ஒன்றுகேள்

ஈசனுனக்கொப்பென்பரிசனையுண்டாக்கியவன்
பூசனைநீசெய்விப்பாய்புண்ணியா - பேசுங்கால் (௧௦௫)

மற்றொருவர்க்கிட்டவரப்படாதாந்தெய்வங்
குற்றமாமுண்மருந்துகொண்டாளாம் - சற்றல்ல

பத்தியமாமாரோபணையங்கொடுத்ததொரு
முத்துவண்ணச்சேலையாமுந்தியாம் - மெத்தவஞ்சம்

விள்ளுவதுநீயில்லாவேளையிலந்நீலியர்க்குக்
கொள்ளைவிலைவதென்னகொஞ்சமோ - வள்ளலே

மூக்கறையரானாலுமொண்டிகுருடானாலும்
ஆக்கமுள்ளசாதியிழுக்கானாலும - போக்கமுடன்

கண்ணாரவுன்னையங்கேகண்டுவிட்டாலிங்குவர
ஒண்ணாதோகூத்திமாரொட்டாரோ - பெண்ணரசி

மாப்பிளைநீரென்றுமதனிமார்வாராரோ
கூப்பிடென்றுமாமிமார்கூறாரோ - மூப்பாயி

பார்க்கவந்தாற்போலவொருபக்கத்திருந்துடம்பு
வேர்க்குதெனப்போர்த்திமார்விசாரோ - ஏற்கையுடன்

மிக்கசிறுபாக்கும்வெற்றிலையுந்தான்சுருட்டித்
தக்ககொழுந்திமார்தாராரோ - அக்கணமே

நோயெங்கேபோமோநொடிக்குமுந்திக்கொல்லுமந்தப்
பேயெங்கேபோமோபெருமானே - நாயகிமார்

கூச்சமுமாய்ச்சற்றேகுணலையுமாய்க்கொஞ்சுதலைப்
பேச்சுமாய்ப்போர்த்தபிடவையுமாய் - வாய்ச்சதொரு

பாடகமுங்காலுமாய்ப்பாங்கொதுக்குங்கையிலிட்ட
சூடகமுங்கொங்கைதுலுக்குமாய் - ஆடகப்பொற் (கூகஉ)

